[1973 நவம்பர் 29

## திருப்புவனம் ஒன்றியத்திலுள்ள கண்மாய்கள்

* 487 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் கண்மாய் (மராமத்து செய்து) ஆழப்படுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஆழப்படுத்தும் திட்டம் ஏதும் ஆய்வில் இல்லை. ஆனால் இக்கண்மாய்க்கு மராமத்து வேலைகள் செய்ய ரூ. 32,000 மதிப்பீட்டில் வேலை முன்னேற்றத்தில் உள்ளது.

* 488. வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பழையனூர் கண்மாய் மராமத்துக்கான மதிப்பீடு எவ்வளவு ?

(இ) இவ்வேலை எப்பொழுது முடிவடையும் ?

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்:** (அ) ரூ. 20,000.

(இ) அடுத்த நிதி ஆண்டில் மதிப்பீட்டுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன் சுமார் மூன்று மாத காலத்துக்குள் முடிக்கப்படும்.

* 489 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பிரமனூர் கண்மாயை மராமத்து செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இவ்வேலைக்கான மதிப்பீடு தல அதிகாரிகளால் ரூ. 24,900-க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு மராமத்து வேலை செய்யப்பட்டு வருகிறது.

1973 நவம்பர் 29]

**திரு. த. சோனையா :** திருப்புவனம் கண்மாய் மிகப் பெரிய கண்மாய். மனித சக்தியால் வெட்டி எடுப்பது என்பது சிரமம் என்று காண்ட்ராக்டர்கள் அஞ்சுகிறார்கள். ஆகவே, புல்டோசர் இயந்திரத்தை வைத்து மண்ணை வெளியேற்றுவதற்கு ஏற்பாடு செய்யவும், அதேபோல் பழையனூர், பிரமனூர் கண்மாய்களும் நீண்ட காலமாக மராமத்துச் செய்யப்படாமல் இருக்கின்றன, அவைகளையும் உடனடியாக ஆழப்படுத்தும் திட்டத்தை எடுத்துச் செய்வதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பிரமனூர் கண்மாயை மராமத்து செய்ய ரூ. 24,900-க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு மராமத்து வேலை செய்யப்பட்டு வருகிறது என்று பதிலளித்திருக்கிறேன். திருப்புவனம் கண்மாய் பற்றிக் கேட்கிறார்கள். திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் பழைய கண்மாயை மராமத்து செய்ய ரூபாய் 20,000 செலவு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. சொ. காவேரிமணியம் :** பொதுவாக இந்த மாதிரி மணல் படிந்த கண்மாய்களை டி ஸில்டிங் செய்வதற்கு என்னென்ன காரணங்களை அரசு எதிர்பார்க்கிறது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஒரு காரணமும் இல்லை. மண் தூர்ந்துவிட்டால் மண் வார வேண்டும். இதுதான் காரணம்.

**திரு. த. சோனையா :** திருப்புவனம் கண்மாயை ரூ. 20,000 செலவில் மராமத்து செய்ய அரசு அனுமதி வழங்க இருக்கிறது என்று அறிவித்தார்கள். உள்ளபடியே திருப்புவனம் கண்மாய் மிகப் பெரிய கண்மாய். ஏற்கனவே பல லட்ச ரூபாய்க்கு எஸ்டிமேட் போட்டு டெண்டர்கள் எல்லாம் வந்து எடுத்து வேலை செய்வதற்கு ஆள்கள் இல்லாமல் நின்று விட்டது. ரூ. 20,000க்கு வேலை செய்வது என்றால் அந்தக் கண்மாயில் பத்தில் ஒரு பகுதியை கூட செய்ய முடியாது. ஆகவே இதற்கு ஒரு பெரிய திட்டத்தைப் போட்டு இயந்திரத்தை வைத்து மணலை வெளியேற்ற அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஒரு திருத்தம். திருப்புவனம் பொறுத்து ரூ. 32,000 மதிப்பீட்டில் செலவு செய்வதற்கு ஒப்பளிப்பு அளித்து வேலை நடைபெற்று வருகிறது என்று திருத்திக் கொள்கிறேன். ரூ. 20,000 என்பது திருப்புவனம்

ஒன்றிய பழைய கண்மாயைப் பற்றியதாகும். ரூ. 32,000 மதிப்பீட்டில் வேலை நடைபெற்று வருகிறது. இதை ஆழப்படுத்தும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை. மராமத்துதான் நடைபெற்று வருகிறது.

**திரு. சொ. காவேரிமணியம்** : மதுரை மாவட்டத்தில் மூன்று நான்கு கண்மாய்கள் குறித்து இம்மாதிரி எழுதிக்கொடுத்திருந்தேன் எக்ஸிக்யூட்டிவ் என்ஜினியரிடம். அவர்கள் சில காரணங்கள் தேவை என்று, மூன்று தடவை அல்லது இரண்டு தடவை அங்கு விவசாயம் சாகுபடி செய்ய முடியாமல் சாவியாகி இருக்கவேண்டும் என்று இப்படி மூன்று நான்கு காரணங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அம்மாதிரி அரசாங்க ஆணை ஏதாவது இருக்கிறதா என்பதை அறியத்தான் நான் அக்கேள்வியைக் கேட்டேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் அறிந்து தெரிவிக்கிறேன்.

மஞ்சலாற்றின் குறுக்கே மதகுப்பொறி

***490. வினா—திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம் தாலுக்கா அசிக்காடு மறையூர் கிராமங்களுக் கிடையே மஞ்சலாற்றின் குறுக்கே ரெகுலேட்டர் ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : இல்லை.

**திரு என். கிட்டப்பா** : மாயூரம் தாலுக்கா அசிக்காடு மறையூர் கிராமங்களுக்கிடையே மஞ்சளாற்றின் குறுக்கே ரெகுலேட்டர் அமைத்து அங்குள்ள விவசாயிகளுக்கு பயன்தரத்தக்க விதத்தில் உள்ள நிலையை உருவாக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : இல்லை என்று பதில் தெரிவித்தேன். ஆனால் திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 1,298.33 லட்சமாகும். இந்தத் திட்டம் 1972-73 முதல் நான்கு வருடக் காலத்தில் செயல்படுத்தப்படும். மறையூர் அணையை